Registered as a Newspaper
பக்கங்கள் 12 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 18

வியாழக்கிழமை
14 டிசெம்பர் 2023

கார்த்திகை 28 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



" பட்ஜெட்டும் வெண்டாச்சு, பார்லிமெண்டையும் கலைச்சாச்சு. ரணிலாரின்ர அடுத்த திட்டம் எலக்சனா?"

# நிறைவேறியது ரணில் பட்ஜெட்

## 122 பேர் ஆதரவு
## 81 பேர் எதிர்ப்பு



**கொழும்பு, டிசெம்பர் 14**
**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான மொட்டு - யானை கூட்டரசு நாடாளுமன்றத்தில் தனது பெரும்பான்மைப் பலத்தை மீண்டும் உறுதிப்படுத்தி, 2024 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்றியுள்ளது.**

11

## நாடாளுமன்று ஒத்திவைப்பு!

கொழும்பு, டிசெ.14
வரவு - செலவுத் திட்ட கூட்டத்தொடர் நேற்றுடன் நிறைவுக்கு வந்த நிலையில், நாடாளுமன்றம் 2024 ஜனவரி 9 ஆம் திகதிவரை ஒத்தி

11

## வடக்கில் மழை

யாழ்ப்பாணம், டிசெ.14
வடக்கு மாகாணத்தில் அடுத்துவரும் நாள்களில் 100 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பரவலாக எதிர்பார்க்கப்படுகின்றது என்று யாழ். மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரிய

11

## திடீர் சுகவீனத்தால் இளம் பெண் சாவு!



யாழ்ப்பாணம், டிசெ.14
இளம் குடும்பப் பெண் ஒருவர் நேற்றுக் காலை திடீர் சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ள நிலையில், உடற்கூற்று மாதிரிகள் சோதனைக்காகக்

11

## மருமகன் தாக்கி மாமனார் மரணம்!

யாழ்ப்பாணம், டிசெ.14
மருமகனின் தாக்குதலுக்கு இலக்கான மாமனார் உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது. கரவெட்டி, வதிரியைச் சேர்ந்த நேசராசா அன்ரன் (வயது-50) என்பவரே உயிரிழந்துள்ளார்.
கடந்த 9ஆம் திகதி வீட்டிலிருந்தவர்கள் கோண்டாவிலில் உள்ள உறவினர்களின் நிகழ்வுவொன்றுக்குச் சென்றிருந்த நிலையில், இவர் வீட்டில் தனித்திருந்துள்ளார். அங்கு வந்த அவரது அக்காவின் மகன் (மருமகன்) தனித்திருந்தவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளார். அயலவர்கள் அவரை மீட்டு மந்திகை மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். மருமகன் மதுபோதையில் இருந்தார் என்று கூறப்படுகின்றது.
மந்திகை மருத்துவமனையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டவர் நேற்று சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

11

## மயிலத்தமடு விவகாரம்; ஜனாதிபதியின் கவனத்துக்கு

மட்டக்களப்பு, டிசெ.14
மயிலத்தமடு, மாதவனையில் மேய்ச்சல் நிலத்துக்காக பண்ணையாளர்களால் முன்னெடுக்கப்படும் போராட்டம் 90ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.
இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சாணக்கியன் ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

11

## ஐ.எம்.எப். கைவிட்டால் நாடு வீழ்ச்சியடையும்!

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.14
சர்வதேச நாணயநிதியத்தின் உதவி மற்றும் கடன் மறுசீரமைப்பை இல்லாதொழித்தால் முழுநாடும் மீண்டும் வீழ்ச்சியடையும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

11

## கத்தி வைத்து அச்சுறுத்தி நகை, பணம் கொள்ளை!

கிளிநொச்சி, டிசெ.14
கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி நகைகள், பணம் மற்றும் சைக்கிள்கள் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன.
இந்தச் சம்பவம் கிளிநொச்சி, பெரியகுளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு நடந்துள்ளது.
இரவு 11.30 மணியளவில் வீட்டில் இருந்தவர் வெளியே வந்தபோது, அவரது கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி நகை, பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.
வீட்டில் இருந்த வயதான இருவரையும் கட்டி அறையில் அடைத்துவைத்த கொள்ளையர்கள், வீட்டைச் சல்லடையிட்டு 2 பவுண் நகைகள் மற்றும் 45 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றைக் கொள்ளையிட்டதுடன், வீட்டில்

11



## காணிப் பிரச்சினை யாழில் ஆராய்வு

யாழ்ப்பாணம், டிசெ.14
யாழ்ப்பாணத்தில் காணப்படும் காணிப் பிரச்சினைகள் தொடர்பாக உண்மை, ஒன்றுமை, நல்லிணக்கத்துக்கான, சுயாதீன ஆணைக்குழுவின் இடைக்காலச் செயலகப் பிரதிநிதிகள் யாழ். மாவட்ட மேலதிக செயலாளர் (காணி) சிறிமோகனனைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.
இந்தச் சந்திப்பு நேற்றுமுன்தினம் யாழ். மாவட்டச் செயலகத்தில் நடந்துள்ளது.
யாழ். மாவட்டத்தில் வனப்பிரதேசம் என அடையாளப்படுத்தப்பட்டுள்ள தனியார் காணிகள், வேறு காரணங்களுக்காக அரசாங்கம் வசமுள்ள தனியார் காணிகள் என்பவை

11

## இந்திய மீனவர்கள் 6 பேர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், டிசெ.14
எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 6 பேர் நேற்று மாலை இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.
காரைநகர் வடக்கு கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தபோதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
கைது செய்யப்பட்ட மீனவர்கள் இன்று காலை நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-26-100)

## சைக்கிளில் சென்றவர் மரணம்

யாழ்., டிசெ.14
வீதியில் சைக்கிளில் பயணித்தபோதுமயங்கி வீழ்ந்தவர் மருத்துவமனைக்குச் செல்ல முன்னர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் பலாலியில்

11

## மயங்கி வீழ்ந்தவர் சாவு!

யாழ்., டிசெ.14
அரைக்கும் ஆலையில் காத்திருந்தவர் திடீரெனமயங்கிவீழ்ந்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம், சங்கானையில் நேற்று

11

## ரவிராஜ் கொலையையும் விசாரிக்க குழு வேண்டும்

### வலியுறுத்துகின்றார் சஜித்



கொழும்பு, டிசெ.14
நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான மகேஸ்வரன், ரவிராஜ் ஆகியோரின் படுகொலை தொடர்பாக விசாரணை நடத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குழு அமைக்க

11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு ஐ.எம்.எவ். 337 மில்லியன் டொலர்!

கொழும்பு, டிசெ. 14

**விரிவாக்கப்பட்ட நிதிவசதிச் செயற்றிட்டத்தின்கீழ் இலங்கைக்கு இரண்டாம் கட்டமாக 337 மில்லியன் டொலர் கடன்நிதியை வழங்குவதற்கு சர்வதேச நாணயநிதியத்தின் பணிப்பாளர்சபை அனுமதியளித்துள்ளது.**

சர்வதேச நாணயநிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிவசதிச் செயற்றிட்டத்தின்கீழ் 2.9 பில்லியன் டொலர் கடனை இலங்கைக்கு வழங்குவதற்கான முன்மொழிவுக்குக் கடந்த மார்ச் மாதம் 20ஆம் திகதி சர்வதேச நாணயநிதியத்தின் பணிப்பாளர்சபை அனுமதியளித்தது. அதன்பிரகாரம் முதற்கட்டமாக 330 மில்லியன் டொலர் கடன் நிதி இலங்கைக்கு வழங்கப்பட்டது. தற்போது இரண்டாம் கட்டமாக 337 மில்லியன் டொலர் கடன் வழங்கப்பட்டுள்ளது. (ம)

# இலகுவாகும் விவாகரத்து!

## நீதி அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 14

இலங்கையில், விவாகரத்தை இலகுவாக்கும் வகையில் புதிய சட்டங்கள் கொண்டுவரப்படவுள்ளன என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது உள்ள சட்டங்களின் கீழ் தம்பதியர் விவாகரத்தைப் பெற்றுக்கொள்வது கடினமாக உள்ளது. நடைமுறையில் கடினமான விடயங்களால் 'நியாயமான விவாகரத்துகள்' நாட்டில் தாமதமாகிக்கொண்டு செல்கின்றன. இதனால் சில வழக்குகள் பத்து தொடக்கம் இருபது வருடங்கள் வரையில் இழுபடுகின்றன. ஒற்றுமையாக வாழ முடியாத தம்பதிகள் பிரிந்துசெல்ல இடமளிக்கப்பட வேண்டும்.

கொண்டு வரப்படவுள்ள புதிய சட்டமூலத்தின்படி ஒரு கணவனோ மனைவியோ ஒரு வருடத்துக்கு மேற்பட்ட காலப்பகுதியில் காணாமற்போயிருந்தால் பத்திரிகையில் விளம்பரம் ஒன்றைப் பிரசுரிப்பதன் மூலம் இன்னொரு திருமணம் செய்துகொள்ளலாம்.

ஒரு கணவனோ மனைவியோ விவாகரத்துச் செய்துகொள்ளும் சந்தர்ப்பத்தில் அவர்களுடைய குழந்தைகள் இருபத்தொரு வயதை எய்தும் வரை குழந்தைகளின் கல்வி போன்ற விடயங்களுக்குரிய செலவுகளை பெற்றோரே பொறுப்பேற்கவேண்டும் இல்லாத பட்சத்தில் நீதிமன்றம் அவர்களது சொத்துகளிலிருந்து குழந்தைகளின் கல்வி போன்ற விடயங்களுக்குரிய பணத்தைப் பெற்றுக்கொடுக்கும் - என்றார். (ம-6)

# இலங்கையில் முழுத்திருப்தி

## நாணயநிதிய அதிகாரிகள் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 14

இலங்கையால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் திருப்தியளிக்கும் வகையில் அமைந்திருக்கின்றன. குறிப்பாக செலவின நிலுவைகள் தவிர்ந்த அனைத்து முக்கியமான நடவடிக்கைகளும், வரி வருமானம் தவிர்ந்த அனைத்து இலக்கிடப்பட்ட அடைவுகளும் ஜூன் மாத இறுதியில் எட்டப்பட்டுள்ளன - என்று சர்வதேச நாணயநிதியத்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கு இரண்டாம் கட்ட நிதி விடுவிக்கப்பட்டதையடுத்து நாணயநிதிய அதிகாரிகள் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளால் இலங்கை தொடர்பில் ஆட்சியியல் மதிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு, அதுகுறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதுடன் ஆசியாவில் இம்மதிப்பாய்வுக்கு உள்ளான முதலாவது நாடு இலங்கையாகும். இது மிக ஆழமாக வேரூன்றியிருக்கும் ஊழல் மோசடிகளை முடிவுக்குக் கொண்டுவருவதை முன்னிறுத்திய மிகமுக்கியமான நடவடிக்கையாகும்.

இவ்வாறானதொரு பின்னணியில் ஆட்சியியல் நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கான தொடர் நடவடிக்கைகளும், சர்வதேச நாணயநிதியத்தின் மதிப்பாய்வு அறிக்கையில் முன்மொழியப்பட்டிருக்கும் பரிந்துரைகளை உரியகாலப்பகுதியில் செயற்படுத்துவதும் நாட்டுமக்கள் அனைவருக்கும் பொருளாதார ரீதியில் பெரிதும் நன்மையபக்கும்.

அதேவேளை கடன் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தல், வருமானத்தை அதிகரித்தல், திருப்திகரமான கையிருப்பு அளவை மீளக்கட்டியெழுப்பல், பணவீக்கத்தைக் குறைத்தல் மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டைப் பாதுகாத்தல் ஆகிய செயன்முறைகளில் இலங்கை பாராட்டத்தக்கவிதத்திலான முன்னேற்றத்தைப் பதிவு செய்திருக்கின்றது. இதன்மூலம் நாட்டின் பொருளாதாரம் ஸ்திரமடைவதற்கான குறிகாட்டிகள் தென்படுகின்றன - என்றுள்ளது. (ம)

# சஜித்தின் கூட்டணியில் டலஸுக்குப் பதவி

கொழும்பு, டிசெ. 14

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் அமையவுள்ள கூட்டணியில் பிரதித் தலைவர் பதவியை நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவுக்கு வழங்குமாறு சுதந்திர மக்கள் சபை தரப்பில் இருந்து யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. பரந்துபட்ட அரசியல் கூட்டணியை அமைக்கும் முயற்சியில் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி ஈடுபட்டுள்ளது. இக்கூட்டணியில் டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபையும் இணையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஒ-44)

# டெங்கைக் கட்டுப்படுத்த சுழற்சியில் கழிவகற்றல்

யாழ்ப்பாணம், டிசெ. 14

யாழ்.மாநகரப் பிரதேசத்தில் டெங்கின் தாக்கம் அதிகரித்துச் செல்வதையடுத்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுரீதியாக கழிவகற்றும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

நுளம்பு பெருகக் கூடிய கழிவுகளைக் குடியிருப்பாளர் கள் தமது குடியிருப்புகளில் சேகரித்துப் பொதியாக்கி வைக்கும் பட்சத்தில் அவை சுழற்சி முறையில் அகற்றப்படுகின்றன.

அதன்படி இன்று வியாழக்கிழமை கொழும்புத்துறை பிரதேசத்திலும் நாளை வெள்ளிக்கிழமை யாழ்.நகரப் பிரதேசத்திலும் மறுநாள் சனிக்கிழமை நல்லூர்ப் பிரதேசத்திலும் நுளம்பு பெருகக் கூடிய கழிவுகள் அகற்றப்படும் என்று சுகாதாரப் பிரிவு அறிவித்துள்ளது. (ச-17)

# போர் நிறுத்தத்துக்கு இலங்கை ஆதரவு!

ஐ.நா. பொதுச்சபையில், காஸாவில் உடனடிப் போர் நிறுத்தம்கோரும் தீர்மானம் அமோக ஆதரவுடன் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்துக்கு ஆதரவாக இலங்கை, இந்தியா உட்பட 153 நாடுகள் வாக்களித்தன. அமெரிக்கா, இஸ்ரேல் உட்பட 10 நாடுகள் எதிராக வாக்களித்தன. உக்ரைன், ஜேர்மன் உட்பட 23 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. (ஒ-44)

# பட்டுப்பாதைக்கு வயது 10

சீனாவின் பட்டுப் பாதைத் திட்டத்தின் 10 ஆவது ஆண்டு நிகழ்வு கொண்டாடப்படுகின்றது. பௌத்த இராஜதந்திரத்தின் ஊடாகபட்டுப் பாதைத்திட்டத்தை முன்னெடுத் துச்செல்வது என்ற தொனிப்பொருளில் நிகழ்வு கொழும்பில் இடம்பெறுகின்றது. 400க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்குபற்றியுள்ளனர். (ஒ-6)

# செலவினத்துக்கு ஈடான எரிபொருள் விலையிடல்

## இலங்கைக்கு ஐ.எம்.எப். அறிவுறுத்து

கொழும்பு, டிசெ. 14

இலங்கை பொருளாதாரத்தில் பலப்பட வேண்டுமாயின், செலவினங்களுக்கு ஈடான எரிபொருள் விலையிடல் மிக அவசியம் என்று நாணயநிதியம் அறிவுறுத்தியுள்ளது.

உத்தியோகபூர்வ கடன்வழங்குநர்களுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம், இதுவரையில் எட்டப்பட்டுள்ள இணக்கப்பாட்டு ஒப்பந்தங்களை உரிய காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தல், வெளியகத் தனியார் கடன்வழங்குநர்களுடன் நியாயமான அடிப்படையில் தீர்வுகளை அடைதல், சமூகப்பாதுகாப்புச் செயற்றிட்டங்களை உறுதிப்படுத்தல், கையிருப்பை மீளக்கட்டியெழுப்பல், நிதியியல் உறுதிப்பாட்டைப் பாதுகாத்தல், ஊழலை இல்லாதொழித்தல் மற்றும் ஆட்சியியல் நிர்வாகத்தை மேம்படுத்தல் என்பனவும் இலங்கைக்குத் தேவைப்படுகின்றன - என்று ஐ.எம்.எப். மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (ம)

# தென்மராட்சியில் டெங்கு தீவிரம்!

தென்மராட்சியில் அண்மைக்காலமாக டெங்குத்தொற்று தீவிரமாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அண்மையில் பெய்த மழை காரணமாகவே டெங்குத் தொற்று தீவிரமாகியுள்ளது. இது தொடர்பில் பொது மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் என்றும் சுகாதாரத்துறையினர் தெரிவித்துள்ளனர். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றங்கள்

## வாளுடன் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 14

புத்தூர்ச் சந்தியில் வாளுடன் நின்ற குற்றச்சாட்டில் ஆவரங்காலைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞன், காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளான்.

திருட்டுத் தொடர்பான தேடுதல் நடவடிக்கைக்காக பொலிஸார் சென்றுகொண்டிருந்தபோதே இளைஞன் கைதாகியுள்ளான். (ஒ-20)

## வவு. பாடசாலைகள் உடைத்துத் திருட்டு

வவுனியா, டிசெ. 14

வவுனியா, சாளம்பைக்குளத்தில் இரு பாடசாலைகள் உடைக்கப்பட்டு அங்கிருந்த சில பொருள்கள் நேற்றுமுன்தினம் திருடப்பட்டுள்ளதாக பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

அல் அக்ஸா வித்தியாலயம் மற்றும் ஆயிசா வித்தியாலயம் என்பவற்றுக்குள் நுழைந்த திருடர்கள் பாடசாலைக் கதவுகளை உடைத்துள்ளதுடன், மோட்டர்கள், மின்விசிறிகள் என்பவற்றையும் திருடிச் சென்றுள்ளனர். (ஒ-110)

## கடையில் திருட்டு சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 14

புத்தூரில் கடையை உடைத்துப் பொருள்களைத் திருடிய சந்தேகநபரைக் கைது செய்துள்ளதுடன் அவரிடமிருந்து திருட்டுப்பொருள்களை வாங்கியவரையும் காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கடை உடைத்து தொலைக்காட்சி, கைபேசி மீள்நிரப்பு அட்டைகள், சிகரெட் உள்ளிட்ட பல பொருள்கள் களவாடப்பட்டிருந்தன. விசாரணைகளை மேற்கொண்ட காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பொலிஸார் புத்தூரைச் சேர்ந்த 19 வயது இளைஞனை சந்தேகத்தில் கைது செய்தனர். அவரிடம் தொலைக்காட்சி வாங்கினார் என்ற குற்றச்சாட்டில் மற்றொருவரையும் பொலிஸார் கைது செய்தனர். (ஒ-27)



## கட்டுப்பாட்டை இழந்து பஸ் விபத்து

சாவகச்சேரி, டிசெ.14

வேகக் கட்டுப்பாட்டை இழந்த அரச பஸ், பஸ் தரிப்பிடத்தில் பயணிகளை இறக்கிக் கொண்டிருந்த தனியார் பஸ்ஸை மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து நேற்றுமாலை மீசாலைச் சந்தியில் நடந்துள்ளது. கொடிகாமத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தனியார் பஸ், மீசாலையில் பயணிகளை இறக்குவதற்காக நிறுத்தப்பட்டது. பின்னால் பயணித்த அரச பஸ், தனியார் பஸ்ஸை மோதி விபத்துக்குள்ளானது. (எ-9)



## காய்கறிகள் விலை உயர்வு!

யாழ்ப்பாணம், டிசெ. 14

வடக்கு மாகாணத்திலும், தமிழகத்திலும் அண்மைக்காலமாக நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக, காய்கறிகளின் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளன.

வடக்கில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக ஆங்காங்கே பயிரழிவுகள் பதிவாகியுள்ளன.

இதனாலும், தெற்கிலிருந்து வடக்குக்கு வரும் மரக்கறிகளின் வரத்துக் குறைவடைந்துள்ளமையாலும் வடமாகாண சந்தைகளில் மரக்கறிகளின் விலைகள் அதிகரித்துள்ளன.

அத்துடன், தமிழகத்தில் புயல் காரணமாக பல்லாயிரம்ஹெக்ரேயர் பயிரழிவுகள் ஏற்பட்டுள்ள நிலையில், அங்கிருந்து இறக்குமதியாகும் பெரிய வெங்காயத்தின் விலையும் அதிகரித்துள்ளது. அடுத்துவரும் நாள்களில் பெரிய வெங்காயத்தின் விலை மேலும் அதிகரிக்கும் என்றும் தெரியவருகின்றது. (ம-113,17)

## மருத்துவ முகாம்!

வவுனியா, டிசெ. 14

வவுனியா மாவட்டச் செயலகம், வவுனியா பிரதேச செயலகம், வவுனியா தெற்குப் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான மருத்துவ முகாம் வவுனியா மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (ரி)

## மஹிந்த விசேட அறிவிப்பு



கொழும்பு, டிசெ.14

சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் சம்மேளனத்தின்போது கட்சித் தலைவரான மஹிந்த ராஜபக்ச விசேட அறிவிப்பொன்றை வெளியிடுவார் என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

மொட்டுக் கட்சியின் 2ஆவது தேசிய சம்மேளனம் நாளை நடைபெறவுள்ளது. அதில் கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் பெயரிடப்படுவாரா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

கட்சித் தலைவர் என்ற வகையில் மஹிந்த ராஜபக்ச விசேட அறிவிப்பொன்றை வெளியிடுவார். அது என்ன அறிவிப்பு என இப்போது கூறமுடியாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-44)

## மாணவர்கள் சேர்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 14

புதுக்குடியிருப்பு, தேவிபுரம் பகுதியிலுள்ள இனியவாழ்வு இல்லத்துக்கு 2024ஆம் ஆண்டுக்குப் புதிய மாணவர்களைச் சேர்க்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பார்வைக்குறைபாடு, கேட்டல் குறைபாடு, பேச்சுக் குறைபாடு உடைய மாணவர்கள் (6 தொடக்கம் 22 வயது) விண்ணப்பிக்கமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்களை நாளைக்குள் வழங்குமாறும் கோரப்பட்டுள்ளது. (ரி)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிலும்பொறுமையைக்கடைப்பிடிக்கவும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டாகும். தெய்வப் பணிகளில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பம் ஏற்படும். அனுசரித்துச் செல்வது நல்லது.

**இடபம்:** வழக்கமான பணிகளிலும் மிகுந்த கவனத்துடன் ஈடுபடவேண்டிய நாள். எதிலும் பொறுமை அவசியம். மற்றவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடவேண்டாம். பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படும்.

**மிதுனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் நீங்கும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். செலவுகள் அதிகரிக்கும்.

**கடகம்:** முயற்சிகளில் வெற்றி உண்டாகும். சிலருக்கு உறவினர்கள் வகையில் எதிர் பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வாகனத்தில் செல்லும்போது சற்று கவனமாக இருக்கவும்.

**சிம்மம்:** மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தேவையற்ற பிரச்சினை ஏற்படும் என்பதால் பொறுமை அவசியம். தெய்வப் பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு உண்டாகும்.

**கன்னி:** தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். கணவன் - மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் அனுசரித்துச் செல்வது நல்லது. தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**துலாம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதற்கு ஏற்ற நாள். சகோதர வகையில் மகிழ்ச்சியுடன் ஆதாயமும் உண்டாகும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். உறவினர்கள் வகையில் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். சகோதர வகையில் ஆதாயம் ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக தேவை. வழிபாடு மகிழ்ச்சி தரும்.

**தனுசு:** உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். தேவையான பணம் இருப்பினும் தேவையற்ற செலவுகளும் ஏற்படலாம். செலவுகள் ஏற்படும். தாயின் தேவையை நிறைவேற்ற சற்று அலைச்சல் ஏற்படும்.

**மகரம்:** அனுகூலமான நாள். எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைக்கும். கணவன் பிணக்குகள் நீங்கும். புதிய முயற்சிக்கு ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். ஆதாயம் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும்.

**கும்பம்:** எதிர்பார்த்த காரியம் சற்று இழுபறிக்குப் பின்னர் முடிந்துவிடும். சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். எதிர்பாராத செலவு ஏற்படும். உடல்நலனில் கவனம் தேவை. நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படும். வாழ்க்கைத்துணை யால் மகிழ்ச்சி உண்டாகும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. தாய்வழி உறவினர்கள் வகையில் சுபச்செலவுகள் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இனியும் மிளகாய் அரைக்காதீர்


இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்துக்கு தீர்வு காண்பதாக புதிய குழுவொன்று புறப்பட்டுள்ளது. உலகத் தமிழர் பேரவையும், சிறந்த இலங்கைக்கான சங்க அமைப்பின் தேரர்கள் குழுவினரும் இந்த முயற்சியை ஆரம்பித்துள்ளனர். இந்த இரு தரப்புகளின் இணைவும் பலத்த சந்தேகங்களையும் விவாதங்களையும் தோற்றுவித்திருக்கின்றது.

உலகத் தமிழர் பேரவையின் இந்த நகர்வுக்கு புலம்பெயர் தேசத்தில் உடனடியாகவே எதிர்வினையாற்றப்பட்டிருக்கின்றது. உலகத் தமிழர் பேரவை 2009ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டிருந்தாலும் அந்த அமைப்பு ஒரு சிலருடன் மாத்திரமே இயங்கி வருவதாகவும், புலம்பெயர் தமிழர்களில் பெரும்பான்மையானவரை அந்த அமைப்பு பிரதிநிதித்துவப்படுத்தவில்லை எனவும் 6 புலம்பெயர் அமைப்புகள் கூட்டாக அறிக்கையிட்டுள்ளன. அத்துடன் உலகத் தமிழர் பேரவையும், சிறந்த இலங்கைக்கான சங்க அமைப்பின் தேரர்கள் குழுவும் இணைந்து வெளியிட்டுள்ள 'இமயமலைப் பிரகடனத்தையும்' அவை நிராகரித்துள்ளன. அந்தப் பிரகடனம் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பிரதிபலிக்கவில்லை என்று 6 புலம்பெயர் அமைப்புகளும் குறிப்பிட்டுள்ளன.

இதேவேளை-தமிழர் தாயகத்தில் செயற்படும் அரசியல் தரப்புகளில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும், ஈ.பி.டி.பி.யும் மாத்திரமே இந்தச் செயற்பாட்டை வரவேற்றுள்ளன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி என்பன இதனை நிராகரித்துள்ளன. தனிப்பட்ட சிலரின் சுயலாப முயற்சிக்காக இது முன்னெடுக்கப்படுவதாக ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி குறிப்பிட்டுள்ளது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோ, ரணில் அரசாங்கத்துக்கு வெள்ளையடிப்புச் செய்யும் முயற்சி என்று இதைச் சாடியுள்ளது. பல எலிகள் சேர்ந்தால் புற்றெடுக்க முடியாதென்பார்கள். அதேபோன்று, இலங்கைத் தமிழர்களின்இனப்பிரச்சினைத்தீர்வுக்கானமுயற்சியிலும் பலரும் இப்போது ஈடுபட்டிருப்பதைக் காண முடிகின்றது,இது குட்டையை குழப்பும் முயற்சியே. பௌத்த-சிங்களப் பேரினவாதிகளுக்கும் அதுவே தேவையாக இருக்கின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில் அடுத்த தேர்தலுக்கான வியூகமாக இந்த முயற்சிக்கு முட்டுக்கொடுக்கின்றார். புலம்பெயர் தமிழர்களையும், ஈழத் தமிழர்களையும் ஒரே கோட்டில் ஏமாற்ற முற்படுகின்றார். அவரது இந்த முயற்சிக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவர் இரா. சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன் ஆகியோர் ஆரவு கொடுக்கின்றனர். இதில் இரா. சம்பந்தனும், எம்.ஏ.சுமந்திரனும் நல்லாட்சிக் காலத்தில் புதிய அரசமைப்பு உருவாகும் என்ற நம்பிக்கையில் ரணிலின் பின்னால் திரிந்தவர்கள். ரணிலின் எல்லா முயற்சிக்கும் கண்மூடி ஆதரவளித்தவர்கள். ஒட்டுமொத்த தமிழ் தலைவர்களும் பௌத்த-சிங்கள ஆட்சியாளர்கள் ஏமாற்றுவார்கள் என்று அவர்களை எச்சரித்தபோதும் அதையெல்லாம் புறக்கணித்து ரணிலுக்கும் தோள்கொடுத்தனர். இறுதியில் என்ன நடந்தது?

இப்போதும் உலகத் தமிழர் பேரவை என்ற 'கடிதத்தலைப்பு' அமைப்பினதும், சிங்கள மக்கள் மத்தியிலேயே அறியப்படாத சிறந்த இலங்கைக்கான சங்க அமைப்பின் தேரர்கள் குழுவினருடனும் இணைந்து தீர்வு முயற்சியில் தலையைப் போடுவதோ அல்லது அவர்களது இமயமலைப் பிரகடனத்தை ஏற்பதோ மீண்டும் தமிழ் மக்களின் தலையில் மிளகாய் அரைக்கும் செயலே. புலம்பெயர் சமூகத்தின் ஆதரவு தேவைதான். தேரர்களின் ஆதரவும் தீர்வு முயற்சிக்கு அவசியம்தான். அதைச் செய்வதற்கான வழி நேர்வழியில் இருக்கவேண்டும். அதைவிட கோடிப்புறத்துக்குள் கூடிக்கதைத்துவிட்டு இதுதான் பிரகடனம் என்று சொல்லி அதைத் தமிழர்கள் தலையில் கட்டநினைப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.




# வடக்கு சுற்றுலாவுக்கு உதவுகிறது கொரியா

**கொழும்பு, டிசெ. 14**

**வடக்கு - கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களை மையமாகக் கொண்டு சமுதாயமட்ட சுற்றுலா அபிவிருத்திக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஒப்பந்தம் கொரியாவுடன் கையொப்பமிடப்பட்டுள்ளது.**

இந்தத் திட்டத்துக்கு கொரிய அரசாங்கம் 2 ஆயிரத்து 172 பில்லியன் வொன் நிதியளிக்கவுள்ளது.

இந்த ஒப்பந்தத்தை மேற்கொள்ள கடந்த ஜனவரி மாதம் அமைச்சரவையின் அனுமதி கிடைத்தது. அதற்கமைய குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, கொரிய சுற்றுலா நிறுவனத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று மாகாணங்களுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளது. (ச-இ)

# கைதிகள் தப்பிப்பு விசாரிக்க குழு!

கொழும்பு, டிசெ. 14

வெலிகந்த - கந்தக்காடு புனர்வாழ்வுநிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள் தப்பிச் சென்ற சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்காக ஐவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

விரைவில் விசாரணை மேற்கொண்டு 3 நாள்களுக்குள் தமக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று குறித்த குழுவுக்கு பணிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் இருந்து தப்பிச் சென்ற கைதிகளில் 129 பேர் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் 9 பேரைத் தேடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாவட்டச் செயலரிடம் விசேட அதிகாரங்கள்

கொழும்பு, டிசெ. 14

பேரிடர் பணிகளைத் துரிதப்படுத்த ஒவ்வொரு மாவட்டச் செயலர்களுக்கும் விசேட அதிகாரங்களை வழங்க அமைச்சரவை அனுமதித்துள்ளது.

தேசிய பேரிடர் மையத்தால் முன்னெடுக்கப்படும் நிவாரணப் பணிகள், மறுவாழ்வுப் பணிகள் மற்றும் புனரமைப்புப் பணிகளை வினைத்திறனுடன் ஆற்ற இந்த அதிகாரங்கள் வழங்கப்படவுள்ளன. பாதுகாப்பு அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட இந்த யோசனைக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. (ச-இ)

# வரி செலுத்தத் தவறிய வர்த்தகர்கள் கைது!

கொழும்பு, டிசெ. 14

கட்டுநாயக்க விமானநிலையத்தில் வைத்து வர்த்தகர்கள் இருவர் விமானநிலைய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு கோடி ரூபா பெறுமதியான மடிக்கணினிகள், கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் உபகரணங்களை வரி செலுத்தாது கொண்டு வந்த இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். கைதுசெய்யப்பட்டவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ச-இ)

# சந்தைக்கு வருகிறது 6 மில்லியன் முட்டை

கொழும்பு, டிசெ. 14

இறக்குமதி செய்யப்பட்ட 6 மில்லியன் முட்டைகளை சந்தைக்கு விநியோகிக்க அரச வர்த்தக இதர சட்டபூர்வ கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது. சந்தையில் முட்டையின் விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது முட்டை விலை 60 ரூபாவுக்கு அதிகமாக எகிறியுள்ளது என்று நுகர்வோர் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## நாளை

15.12.2023

**வெள்ளிக்கிழமை**

**கார்த்திகை - 29**

சுபநேரம் : 06.21 - 07.51

ராகுகாலம் : 10.51 - 12.21

## நாளொரு நல்வார்த்தை

**மக்களின் தலையில்
கொட்டிக்கொண்டிருப்பதன் மூலமாக
அவர்களை உங்களால் வழி நடத்த முடியாது.
அதற்குப்பெயர் தாக்குதலே தவிர
தலைமைப்பண்பல்ல.**

**– ட்வைட் டி ஐசனோவர் –**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடுக்குநாறி ஆலயத்தினரிடம் பொலிஸார் மீண்டும் விசாரணை

**வவுனியா, டிசெ. 14**

**வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலய நிர்வாகத்தினர் நெடுங்கேணிப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் மீண்டும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.**

வவுனியா வடக்கு, ஒலுமடு, வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயம் தொல்பொருள் திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன், புத்தர் சிலையும் வைப்பதற்கு முயற்சிகள் இடம்பெற்றிருந்தன. ஆதிசிவன் ஆலய விக்கிரகங்களும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் உடைக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் பல்வேறு போராட்டங்கள் மற்றும் வழக்கு விசாரணைகளின் பின்னர் தொல்பொருள்களைச் சேதப்படுத்தாது வழிபாடு செய்வதற்கு வவுனியா நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது.

இந்நிலையில், ஆலய நிர்வாகத்தினர் மற்றும் பூசகர் ஆகியோரை அழைத்த நெடுங்கேணிப் பொலிஸார், 2019 - 2020ஆம் ஆண்டு வருடாந்தத் திருவிழாவுக்கு அனுமதி தந்தது யார்?, 2019ஆம் ஆண்டு ஏணிப்படி அமைப்பதற்கு நிதி உதவி வழங்கியது யார்?, ஏணிப்படியை மலைக்குக் கொண்டு சென்று நிறுவியவர்கள் யார்?, 2019 - 2020ஆம் ஆண்டு திருவிழாவுக்கு ஒலி பெருக்கியைப் பயன்படுத்த அனுமதி தந்தது யார்?, 2019ஆம் ஆண்டு ஆலயச்சூழலை அடையாளப்படுத்தும் நோக்கில் சில முக்கியமான மரங்கள் தொல்பொருள் சாராத இடங்களுக்கு வெள்ளைநிற சுண்ணாம்பு பூசப்பட்டிருந்தது. அதனைச் செய்தது யார்? என விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஒ-18-110)



## ஊழலைக் கட்டுப்படுத்தல் யாழில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ. 14

'நேர்மையான தேசத்தை நோக்கி' எனும் தொனிப்பொருளில் இலஞ்சம் மற்றும் ஊழலைக் கட்டுப்படுத்தல் தொடர்பான விழிப்புணர்வுக் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்களுக்கு இலஞ்சம் மற்றும் ஊழலைக் கட்டுப்படுத்துதல் தொடர்பான விழிப்புணர்வு குறுந்திரைப்படம் காட்சிப்படுத்தப்பட்டதுடன் விழிப்புணர்வுக் கருத்துகளும் பரிமாறப்பட்டன. (ச-66)



## சனசமூக நிலையசேவை கலைவாணி முதலிடம்!

யாழ்ப்பாணம், டிசெ. 14

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபைக்குட்ட சனசமூக நிலையங்களின் தரப்படுத்தல் வரிசையில் வடலியடைப்பு கலைவாணி சனசமூக நிலையம் முதலாமிடம் பெற்றுள்ளது.

வலி. தென்மேற்குப் பிரதேசசபையில் அண்மையில் நடைபெற்ற தேசிய வாசிப்பு மாதப் பரிசளிப்புவிழாவில் வைத்து வடலியடைப்பு கலைவாணி சனசமூக நிலையம் கௌரவிக்கப்பட்டது. (ச)

## குருதிக்கொடை

யாழ்., டிசெ. 14

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் முன்னாள் பொதுமருத்துவ நிபுணர் அமரர் அம்பலவாணர் ரகுபதியின் ஐந்தாம் ஆண்டு நினைவேந்தலும் குருதிக்கொடை நிகழ்வும் எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் இணுவில் அறிவாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ச-66)



# கிளிநொச்சிக் குளத்தில் நகரக் கழிவுகள் கலப்பு

### தடுக்குமாறு பொது அமைப்புகள் வலியுறுத்து

கிளிநொச்சி, டிசெ. 14

கிளிநொச்சி நகரத்திலுள்ள குளத்தில் கிளிநொச்சி பொது மருத்துவமனை உட்பட நகரத்தின் கழிவுகள் கலக்காதவாறு கட்டுமானங்கள் எதிர்காலத்தில் உருவாக்கப்படவேண்டும் என்று பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்துக்குச் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்ளும் குளமாக கிளிநொச்சிக் குளம் விளங்குகிறது.

கழிவுப் பொருள்கள் மற்றும் மருத்துவ கழிவுப் பொருள்கள் கிளிநொச்சிக் குளத்தை அண்டிய பகுதிகள் மற்றும் குளத்துக்கு நீர் கொண்டுவரும் வாய்க்கால் பகுதிகளில் பொறுப்பற்ற வகையில் கொட்டப்படுகிறது.

அத்துடன் விவசாயிகள் மற்றும் பொது மக்கள் தமது வாகனங்களை வாய்க்கால் பகுதிகளில் கழுவிச் சுத்தம் செய்கின்றனர். இதனால் நீர் சுத்திகரிப்புப் பணியில் சிரமம் உண்டாகிறது என பொறியியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். எனவே நகரப் பகுதிகளிலிருந்து கிளிநொச்சிக் குளத்தைக் கழிவுகள், கழிவுநீர் சென்றடையாமல் தடுப்பதற்கேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ச-13)

## நூல் வெளியீடு

யாழ்., டிசெ. 14

சங்கானை சிவப்பிரகாசமகாவித்தியாலயத்தின் 'அதிகாரம் இதழ் - 2' நூல் வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணிக்குப் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-இ)

## ‘அஸ்வெசும’ விநியோகம்

யாழ்ப்பாணம், டிசெ. 14

தென்மராட்சிப் பிரதேசத்தில் 'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்தில் இணைக்கப்பட்ட பயனாளிகளுக்கு நவம்பர் மாதம் வரையான கொடுப்பனவுகள் அந்தந்த வங்கிகளில் விநியோகிப்படுகின்றன.

கடந்த ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர், ஒக்ரோபர், நவம்பர் மாதங்களுக்கான கொடுப்பனவுகளே வங்கிகள் ஊடாக வழங்கப்படுகிறது. டிசெம்பர் மாதக் கொடுப்பனவு கிடைத்ததும் விநியோகம் இடம்பெறுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

## விவசாயிகளுக்கு ஜப்பானின் உரம்

ஜப்பான் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட யூரியா உரம் விவசாயிகளுக்கு இலவசமாக விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

30 பரப்புக்குட்பட்ட செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு இந்த இலவசயூரியா உரம் கமநல சேவைகள் நிலையங்களூடாக வழங்கப்படுகின்றன. (ச-17)



யோகர் சுவாமிகள் குரு பூசைத் தினத்தை முன்னிட்டு, யோகர் சுவாமிகள் தொண்டுத்தாபன அனுசரணையில் பிள்ளைகளிடையே ஆன்மீக, அற, விழுமிய, மத, பண்பாட்டு அம்சங்களை வலியுறுத்தும் வகையிலான போட்டிகள் வவுனியா வடக்கு வலயக் கல்வி அலுவலகத்தால் அண்மையில் நடத்தப்பட்டன.

# காணாமலாக்கப்பட்டோருக்கு சர்வதேச விசாரணை தேவை

### காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டம்

கிளிநொச்சி, டிசெ. 14

காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தில் சர்வதேச விசாரணையே தேவை என்று வலியுறுத்தி காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளால் வடக்கு - கிழக்கில் அண்மையில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு இந்தப் போராட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. வடக்கிலும் கிழக்கிலும் பரவலாக இந்தப் போராட்டங்கள் இடம்பெற்றன. இதன்போது சர்வதேச விசாரணையே காணாமலாக்கப்பட்டோருக்கு நீதியைப் பெற்றுத் தரும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினார்கள்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், முன்னாள் பிரதேசசபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-113-110-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம்பரிய விவசாயமுறை மீட்டெடுக்கப்பட வேண்டும்

*யாழ்.மாவட்டச் செயலர் அறிவுறுத்து*



**யாழ்ப்பாணம், டிசெ. 14**
**விவசாயம்சார் வரலாறு கொண்ட எமது பாரம்பரிய விவசாய முறைமைகளை மீள மீட்டெடுப்பதற்கு வடக்கு விவசாயப் பிரிவு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று யாழ்.மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.**

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விவசாயக் குழுக்கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
விவசாயம் தற்பொழுது நடைமுறையில் இருப்பினும் பாரம்பரியமற்றுக் காணப்படுகிறது.
தற்போது விவசாயச் செய்கையில் கபில நிறத் தத்திகள் வெண்ணிற முதுகுத்தண்டு தத்திகளின் தாக்கம் பீடித்துள்ளது. இதற்குக் காலாவதியான மருந்துகள், அளவுக்கதிகமான உரவிநியோகம் என்பனவே பிரதான காரணமாக அமைகின்றன.
எமது நாட்டில் உணவுத்தேவை அதிகளவில் காணப்படுதால் செயற்கை விவசாயத்தின் விளைச்சல் முதன்மைப்படுத்தப்படுகிறது .
தற்போது பாரம்பரிய விவசாய முறைமைகள் மழுங்கடிக்கப்பட்டு புதிய முறைகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.
ஆனால் அமெரிக்காவில் செயற்கை பற்றூரிகைக்குப் பதிலாக இயற்கை பற்றூரிகையாக வேப்பம் குச்சியே விற்பனை செய்யப்படுகின்றது.
நாமும் எமது விவசாயச் செய்கையில் பாரம்பரியத்தை நழுவவிடாது இணைத்துச் செல்வதனூடாக தன்னிறைவு காண்போம்-என்றார். (ச-125)

## யாழ்ப்பாணத்தில் நேற்று மனித உரிமைகள் தினம்

யாழ்ப்பாணம், டிசெ. 14
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மனித உரிமைகள் தினத்தின் 75ஆவது ஆண்டை முன்னிட்டு 'சகலருக்கும் கௌரவம், சுதந்திரம் மற்றும் நீதி சமவாயம்' என்னும் கருப்பொருளிலான மனித உரிமை பாதுகாவலருக்கான வழிகாட்டல் கலந்துரையாடல் கலைத்தூது அழகியற் கல்லூரியில் நேற்று இடம்பெற்றது.
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தின் இணைப்பாளர் த. கனகராஜ் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் மனித உரிமை வரைவு தயாரித்தல் தொடர்பிலும் ஆராயப்பட்டது. (ஒ-27)

## மின்கட்டண நிலுவை மாதந்தோறும் அறவிடுக!

*முல்லை மக்கள் கோரிக்கை*

முல்லைத்தீவு, டிசெ. 14
மாதந்தோறும் மின் கட்டணங்களை அறவீடு செய்தால் பொருளாதாரம் நலிவுற்றோர் மின் கட்டணங்களைச் செலுத்துவதில் நெருக்குவாரத்துக்கு உட்படமாட்டார்கள் என்று மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,
முல்லைத்தீவில் மின்சாரசபையினர் இரு மாதங்களுக்கு ஒரு தடவையே வருகை தந்து மின்பட்டியலை வழங்குகின்றனர். இதனால் இருமாத நிலுவையை ஒரே மாதத்தில் செலுத்துவதற்குப் பொருளாதாரம் நலிவுற்ற குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன.
எனவே மாதந்தோறும் மின் கட்டணங்களை அறவீடு செய்வதற்கு மாவட்ட மின்சார அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ச-13)

## அணு மின்சாரத்தில் முதலிடும் நாடுகள்!

கொழும்பு. டிசெ. 14
இலங்கையில் அணு மின்சாரத் துறையில் முதலீடு செய்வதற்கு ரஷ்யா, அமெரிக்கா, சீனா, டென்மார்க் ஆகிய நாடுகள் முன்வந்துள்ளதாக இலங்கை அணுசக்தி அதிகாரசபையின் தலைவர் பேராசிரியர் ரோசா தெரிவித்துள்ளார்.
இலங்கைக்கு அண்மையில் வருகைதந்த ரஷ்யக் குழு சமர்ப்பித்த திட்டவரைவு வெளிநாட்டமைச்சின் அனுமதிக்காக அனுப்பப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த திட்டத்தினூடாக இலங்கையர்களுக்கு அணுசக்தித் துறையில் பயிற்சிகளை வழங்கவும்ரஷ்யா முன்வந்துள்ளதாகஅவர்தெரிவித்துள்ளார். (ஒ-6)

## அபிவிருத்திப் பணிகளில் மன்னார் புறக்கணிப்பு

*மீனவ சமூகம் சுட்டிக்காட்டு*

மன்னார், டிசெ. 14
மீன்பிடி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளிலிருந்து மன்னார் மாவட்டம் தொடர்ச்சியாகப் புறந்தள்ளப்பட்டு வருகின்றது.
-இவ்வாறு நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் ஆலம் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மீன்பிடி நடவடிக்கைகள் மட்டுமல்ல மன்னார் மாவட்டத்தில் நடைபெறுகின்ற அபிவிருத்திச் செயற்பாடுகளிலும் மன்னார் மாவட்டமானது ஓரங்கட்டப்பட்டு வருகிறது. மாவட்டத்துக்கு வருகின்ற எந்தவிதமான திட்டங்களாக இருந்தாலும் சரி மாவட்ட மக்களுக்குப் பயனளிக்குமாக இருந்தால் அவற்றுக்கு நாங்கள் பூரண ஆதரவை வழங்குவோம். அதேவேளை மீனவ சமூகத்தின் வாழ்வாதாரத்துக்கும் செயற்பாடுகளுக்கும் ஏதேனும் பாதகங்கள் ஏற்படின் அவற்றுக்கு அனுமதிக்கோம் - என்றார். (ச-213)

## தினம் தெரியுமோ?

**இப்பத்தைக் காலத்தில எல்லாரும் மனிசரை நம்பிறதைவிட மிஷினை நம்பிறதுதான்கூட. ஆனாலும் சிலவேளையளில மிஷின்களும் மனிசரை மாதிரி கழுத்தறுக்கிறதும் உண்டு.**

**நேற்று வடமராட்சி வல்வெட்டித்துறையில ஒரு சம்பவம். அங்க உள்ள இலங்கை வங்கி ஏ.ரி.எம். மிஷினில ஒராள் அவசரத்தேவைக்கு காசு எடுக்கப் போயிருக்கிறார். அவரின்ர எக்கவுண் வேற ஒரு வங்கியில இருக்குது. எண்டாலும் இப்பதான் எந்த வங்கியெண்டாலும், வேற வங்கியின்ர ஏ.ரி.எம். மிஷினில போட்டு காசெடுக்கலாமே. அதால இலங்கை வங்கி ஏ.ரி.எம். மிஷினுக்குள்ள கார்ட்டை போட்டு, என்னென்ன பட்டினை அமத்த வேணுமோ அதுகளையெல்லாம் அமத்தி, 'உங்கள் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும்' எண்ட மெசெஜ் வந்திட்டு. இந்தா இப்ப காசு வந்திடும் எண்டு அவரும் மிஷினுக்கு முன்னால கையை நீட்டிக் கொண்டே நிக்கிறார், நிக்கிறார், ம்கூம், காசு கடைசிமட்டும் வரவேயில்லை. ஆனால் அவரின்ர எக்கவுண்டில இருந்து அவர் எடுக்க நினைச்ச மூண்டு லட்சம் ரூபா வெட்டுப்பட்டிட்டு எண்டு போனுக்கும் மெசெஜ் வந்திட்டுது. உடன ஓடிப்போய், இலங்கை வங்கி மனேச்சரிட்ட காசு வரேலை எண்டு முறைப்பாடு செய்திருக்கிறார். அதுக்கு அந்த மனேச்சர், ' உங்கட எக்கவுண்ட் எந்த வங்கியில இருக்கோ அந்த வங்கியிலதான் போய் நீங்க கொம்ப்ளைண்ட் பண்ணோனும்' எண்டு சொல்லியிருக்கிறார்.**

**காசு எடுக்கப் போனவரும் உடனேயே கொஞ்சம் தள்ளியிருந்த , தன்ர எக்கவுண்ட் உள்ள வங்கிக்கு ஓடிப்போய் விசயத்தைச் சொல்லியிருக்கிறார். உடன அவை ' வல்வெட்டித்துறை இலங்கை வங்கி ஏ.ரி.எம்.மிலையோ கார்ட் போட்டனியள்?' எண்டு கேக்க, இவரும் தலையாட்டியிருக்கிறார். ' தம்பி, இந்தமாசம் மட்டும் அந்த ஏ.ரி.எம். மிஷினில இப்பிடி காசு வரேலை எண்டு எங்களுக்கு இருபது முறைப்பாடு வந்திருக்கு. அந்த மிஷினில ஏதோ பிழை. அதை அந்த வங்கிக்காரர் கவனிக்கினமில்லை. பாவம், சனங்கள் அவசரத்துக்கு காசு எடுக்கப் போய் இப்பிடி அந்தரப்படுகுது. உங்கட காசு திரும்ப உங்களுக்கு வர மூண்டு நாளாகும்' எண்டு சொல்லி அனுப்பி இருக்கினம்.**


**ஏ.ரி.எம். மிஷினில ஆக்கள் அவசர தேவைக்குத்தான் கூடுதலாப்போய் காசு எடுக்கிறவை. இப்பிடி எடுக்க நினைச்ச காசு வெட்டுப்பட்ட பிறகும், கைக்கு வரேலை எண்டா அவை என்ன செய்ய ஏலும்? எக்கவுண்டில இருந்த காசு வெட்டுப்பட்டால் வங்கிக்குப் போய் பாஸ்புத்தகத்தை குடுத்தும் பிறகு எடுக்கேலாதெல்லோ. ஒரு கிளை மனேச்சரின்ர அலட்சியத்தால சனங்கள் எல்லோ அந்தரப்பட வேண்டியிருக்கு. ஆரும் உரியவை அந்த மிஷினில உள்ள பிழையைத்திருத்தி சனங்கள் கஷ்டப்படாமல் இருக்க வழிசெய்யமாட்டினமோ?**

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2022ம் ஆண்டுக்குரிய பட்டமளிப்பு விழாவில்

**BSc. in Industrial Statics** பட்டம் பெற்ற

## இராஜேஸ்வரன் இளங்குமரன்

**(BSc. in Industrial Statics)**

அவர்களை மனதாரப் பாராட்டுவதோடு அவர் மேலும் பல பட்டங்களைப் பெற்று வாழ்வின் மகத்தான நிலையை அடைய எல்லாம் வல்ல கும்பழாவளை கொம்பனை பிரார்த்திக்கின்றோம்.

**வாழ்த்துவோர்: மாமா - செ. கந்தசாமி**
(ஓய்வுநிலை மக்கள் வங்கி முகாமையாளர்)
**மாமி - க.லீலாதேவி** தம்பதியினர்
***சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்.***

## வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(மட்டுப்படுத்தப்பட்டது)

Regd NO: J/2070 of 15.12.1989

# அறிவித்தல்

## பகிரங்க மூடிய கூறுவிலை

- வடமராட்சி கிழக்கு.ப.நோ.கூ சங்கத்திற்கு சொந்தமான லொறி.கன்ரர் என்பன மூடிய கூறுவிலை மூலம் விற்பனை செய்யப்பட உள்ளன.
- மூடிய கூறுவிலை மூலம் விற்பனைக்கு விற்கப்படும் வாகனத்திற்கான விண்ணப்ப படிவத்தினைச் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 500/- (ஐந்நூறு) செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும். இப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
- அலுவலகத்தில் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொண்ட படிவத்தின் விண்ணப்பம் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.
- மேற் கூறிய வாகனங்களை மருதங்கேணிதெற்கு தாளையடியில் இருக்கும் தலைமைக் காரியாலயத்தில் பார்வையிடலாம்.
- பார்வையிடும் நேரம் 14.12.2023 ந் திகதி தொடக்கம் 28.12.2023 ந் திகதி வரையும் விடுமுறை நாள் தவிர்ந்த கிழமை நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை
- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை தலைவர். வடமராட்சி கிழக்குப். ப.நோ.கூ.சங்கம் மருதங்கேணி தெற்கு எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் லொறி. கன்ரர் விற்பனைக்கான கேள்வி விண்ணப்பம் எனக் குறிப்பிடல் வேண்டும்.
- இம் மூடிய கூறுவிலைக்கான விண்ணப்பம் 14.12.2023 ந் திகதி தொடக்கம் 28.12.2023 ந் திகதி நண்பகல் 12.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். வாகனங்களுக்கான மூடிய கூறுவிலை 28.12.2023 ந் திகதி பிற்பகல் 12:30 மணிக்கு எல்லோர் முன்னிலையிலும் திறக்கப்படும்.
- லொறியினையும் கன்ரரினையும் கூறுவிலையின்படி பெற்றுக் கொள்பவர்கள் அன்றைய தினமே கூறுவிலையில் குறிப்பிடப்படும் பணத்தினை முழுமையாக செலுத்தி லொறியினையும். கன்ரரினையும் கொண்டு செல்லுதல் வேண்டும்.
- ஆரம்ப விலை :-
  - லொறி :- ரூபா **4000000.00** (நாற்பது இலட்சம்)
  - கன்ரர் - ரூபா **550000.00** (ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம்)
- கூறுவிலைகள் தனித்தனி விண்ணப்பத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

**தலைவர்,**
**வடமராட்சி கிழக்கு.ப நோ.கூ.சங்கம்**
**தொலைபேசி இலக்கம்-0212260504**

# முருங்கைக்கு கிராக்கி

யாழ். குடாநாட்டில் முருங்கைக்காய்க்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

அண்மையில் மழையால் முருங்கை மரங்களும் பாதிக்கப்பட்ட நிலையில் அவற்றின் விலை எகிறியுள்ளன சந்தைகளில் தற்போது ஒரு கிலோ முருங்கைக்காய் ஆயிரத்து 600 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

(ச-17)

## JAFFNA MEDICAL ASSOCIATION ANNUAL GENERAL MEETING - 2024 NOTICE OF MEETING

Notice is hereby given that the Annual General Meeting (AGM) of the Jaffna Medical Association will be held on Saturday, 3rd February 2024 at 11.00 a.m. at the Nurses Training School Lecture Hall Teaching Hospital, Jaffna. **for the following purposes;**

1. To receive and consider the Annual report of the committee of Management on the affairs of the company and the statement of accounts for the year ended 31st December 2023 and the report of the auditors there on.
2. To consider any resolutions proposed by members and committee where due Notice has been given.
3. To elect the committee of management for year 2024.
4. To appoint the auditors of the association and to authorize the committee of Management to determine their remuneration.

**By order of the committee of management,**
**Honorary Secretary**
**14th December 2023**

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை - புத்தூர் முன்பள்ளிகளுக்கு மாணவர்களை இணைத்தல் - 2024

வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் பின்வரும் முன்பள்ளிகளுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

- அரிச்சுவடி முன்பள்ளி - ஆவரங்கால்
- கஜமுகன் முன்பள்ளி - அச்சுவேலி
- சிகரம் முன்பள்ளி - இருபாலை

முன்பள்ளிகளில் கல்விகற்க அனுமதி பெறும் மாணவர்களுக்கு கீழ்வரும் வசதிகள் வழங்கப்படும்.

* எவ்வித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது.
* முன்பள்ளியில் தகைமை பெற்ற ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றது.
* இலவச சீருடை வழங்கப்படும்.
* இலவச சத்துணவுகள் வழங்கப்படும்
* நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய முன்பள்ளியில் கற்கக் கூடிய வசதி (Smart Preschool).
* இலவச கல்விச் சுற்றுலா வசதிகள்

குறித்த முன்பள்ளிகளில் தங்கள் பிள்ளைகளை இணைத்துக்கொள்ள விரும்பும் பெற்றோர்கள் அதற்கான விண்ணப்பப்படிவத்தை வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகம். உப அலுவலகங்கள் மற்றும் முன்பள்ளிகளில் பெற்றுக்கொள்ள முடியும்.
விண்ணப்பங்களை பூரணப்படுத்தி **16.01.2024** ஆம் திகதிக்கு முன்னர் குறித்த முன்பள்ளிகளில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.
மேலதிக தகவல்களுக்கு பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தலைமை அலுவலகம்- **021 205 8867**

**இ.பகீரதன்**
**செயலாளர்**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.** **14.12.2023**

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் 2024 ஆம் ஆண்டிற்கான 1வது பகிரங்க ஏல அறிவித்தல்

| தொ.இல | விபரம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | |
| 1 | உடுவில் கீளிச் சந்தை | 156,940.00 | |
| 2 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை - 02 | 371,565.00 | 250.00 |
| 3 | முட்டைக் கடை இல 04 | 47,500.00 | 250.00 |
| 4 | கோழி உரித்தல் கடை இல 05 | 238,025.00 | 250.00 |
| 5 | கோழிக்கடை இல 06 | 190,000.00 | 250.00 |
| 6 | பொது மலசலகூடம் | 58,670.00 | |
| | உடுவில் உப அலுவலகம் | | |
| 1 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம்(மின்கட்டணம் குத்தகைக்கு எடுப்பவர்களால் செலுத்தப்படல் வேண்டும்) | 47,645.00 | |
| 2 | இணுவில் கோழிறைச்சிக்கடை | 276,450.00 | 250.00 |
| 3 | இணுவில் சந்தை | 66,880.00 | |
| 4 | மல்வம் சந்தை | 57,475.00 | |
| 5 | மல்வம் மாட்டிறைச்சிக் கடை | 351,975.00 | 250.00 |
| | ஏழாலை உப அலுவலகம் | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை | 38,475.00 | 250.00 |
| 2 | ஏழாலை மயிலங்காடு பொதுச்சந்தை | 593,755.00 | |

காலம் :- 19.12.2023ம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு
இடம் :- தலைமை அலுவலகம். வலிகாமம் தெற்கு பிரதேச சபை. கே.கே.எஸ் வீதி. சுன்னாகம்

குறிப்பு: - ஏலத்தில் பங்குபற்றும் கேள்விதாரர்கள் தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன். தாம் வதியும் இடத்தின் கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பிப்பதுடன் ரூபா [illegible],000.00 செலுத்தி கலந்துகொள்ளமுடியும். தெரிவுசெய்யப்படும் குத்தகைக்காரர் குத்தகைத்தொகையின் ½ பங்கு. மற்றும் 3மாத வாடகை என்பவற்றினை 27.12.2023ம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். ஏலம் சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.

**திருமதி சாரதா உருத்திரசம்பவன்** **14.12..2023**
**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை,**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருகோணமலை கப்பல்துறை சரஸ்வதி வித்தியாலய அதிபரின் எழுத்துமூலக் கோரிக்கைக்கமைய, பாடசாலையின் மைதானத் திருத்த வேலை மற்றும் பாதுகாப்பு வேலி அமைப்பதற்காக ஒரு இலட்சம் ரூபா நிதி சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால் பாடசாலை அதிபரிடம் அண்மையில் கையளிக்கப்பட்டது. (ரி-66)



மலையகம், பதுளை மாவட்டத்தின் பல பகுதிகளில் ஏற்பட்ட மண் சரிவால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாமில் வசிக்கின்ற 83 குடும்பங்களுக்கு சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் 4 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய உலர் உணவுப் பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன. நிகழ்வுகளுக்காக 20 ஆயிரம் ரூபா நிதியும் வழங்கப்பட்டது. குறித்த உதவிகளைச் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் இணைந்து நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார். (ரி-66)



சாவகச்சேரி சக்தியம்மன் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களிடையே, தெங்குப் பயிரை ஊக்குவிக்கும் விதமாக வடமாகாண சத்தியசாயி அமைப்பினரால் மரநடுகை மேற்கொள்ளப்பட்டது. (ச-9)



பருத்தித்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட வருடாந்த மாவட்ட சாரண திரளணியும் குருளைச் சாரண விழாவும் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. பருத்தித்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் உபதலைவர் ச.திரவியராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டிப் பிரதேச செயலர் ஈ.தயாரூபன் பங்கேற்றார். (ச-100)



வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு தென்மராட்சி மாணவர் ஒன்றியத்தால் 'விதைத்துக்கொண்டேயிரு முளைத்தால் மரம் இல்லையேல் உரம்' என்ற தொனிப்பொருளின் கீழ் பயன்தரு மரக்கன்றுகள் அண்மையில் நடுகை செய்யப்பட்டன. (ச)



சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு ஏ.எச்.ஆர்.சி நிறுவனத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை, வெருகல் பிரதேச சிவில் அமைப்புகளால் மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் அண்மையில் மேற்கொள்ளப்பட்டன. (ம)



தாய்லாந்தில் இடம்பெற்ற 20ஆவது 'சர்வதேச ஜுனியர் விஞ்ஞான ஒலிம்பியாட்' போட்டியில் கலந்துகொண்ட இலங்கை, வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவன் மயூரன் யதுர்ஷன் வெண்கலப் பதக்கத்தைத் தனதாக்கியுள்ளார். இந்தப் போட்டியில் ஆறு பேர் இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்தனர். அவர்களில் மூவர் வடக்கைச் சேர்ந்தவர்கள். (ம-75)



மன்னார் ரொட்டரிக் கழகத்தின் ஆளுநர் வருகைக் கூட்டமும், ஐந்தாவது பதவிப்பிரமாணமும் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட முன்னாள் மாவட்டச் செயலரும், மன்னார் மாவட்ட ரொட்டறிக் கழக கௌரவ உறுப்பினருமான ஸ்டான்லி டிமெல் கலந்துகொண்டார். (ம-213)




2022ஆம் ஆண்டு தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வொன்று, இலங்கை வங்கியின் ஏற்பாட்டில் கோண்டாவிலில் அண்மையில் இடம்பெற்றது. வங்கியில் கணக்கைப் பேணுவோர் தெரிந்தெடுக்கப்பட்டு இவ்வாறு கௌரவிக்கப்பட்டனர். (ம-213)



சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு, அராலி மேற்கு முத்தமிழ் சனசமூக நிலையத்தில் மனித உரிமைகள் தொடர்பான வீதி நாடகம் அண்மையில் அரங்கேற்றப்பட்டது. சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் செம்முகம் ஆற்றுகைக் குழுவினரால் இந்த விழிப்புணர்வு நாடகம் முன்னெடுக்கப்பட்டது. (ம-27)



அமரர் சி.கலாநிதியின் 10 ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு அவரது குடும்பத்தினரால் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 20 மாணவர்களுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் இலங்கை வங்கியில் வைப்புச் செய்து வங்கிப் புத்தகங்கள் கையளிக்கப்பட்டன. (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலஞ்சம் பெற முடியாதென்பதால் பல திட்டங்களை எதிர்க்கின்றனர்

## ஜனாதிபதி ரணில் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 14

டீசல் மற்றும் நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்கள் வாயிலாக இலஞ்சம் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தாலும், சூரிய மற்றும் காற்றாலை வேலைத்திட்டங்களின் ஊடாக இலஞ்சம் பெற முடியாது என்பதாலேயே அவ்வாறான திட்டங்களுக்கு சில குழுக்களால் பெரும் எதிர்ப்பு தெரிவிக்கப்படுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தொழில்நுட்ப அமைச்சு மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சுகளின் வரவு - செலவு மீதான விவாதத்தின் போது ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:-

பூநகரி திட்டத்தின் கீழ் ஏரியொன்றை அமைத்து 20 ஆயிரம் ஏக்கரில் மீண்டும் விவசாயம் செய்ய வாய்ப்பு உள்ளது. அவுஸ்திரேலியாவின் யுனைடெட் சோலர் எனர்ஜி நிறுவனம் வழங்கிய மின் கலங்களை அடிப்படையாகக் கொண்ட ஆசியாவின் மிகப் பெரிய சூரியசக்தி கட்டமைப்பை முதன்முறையாக இலங்கைக்குக் கிடைத்திருக்கிறது. இதற்கு மின்சாரசபையின் பொறியியலாளர்கள் பலரும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இவர்களுக்கு நிலக்கரி மற்றும் எரிபொருள் என்பவற்றின் வாயிலாக இலஞ்சம் கிடைக்கிறது. ஆனாலும் சூரிய மற்றும் காற்றுச் சக்திகள் வாயிலாக இலஞ்சம் பெற்றுக்கொள்ளமுடியாது என்பதால் இவ்வாறான வேலைத்திட்டங்களுக்கு முன்பிருந்தே பொறியியலாளர்கள் குழுவொன்று எதிர்ப்புத் தெரிவித்தது. 2003ஆம் ஆண்டில் நாம் நுரைச்சோலைத் திட்டத்தை நிறுத்தினோம். அந்த இடத்துக்குப் பொருத்தமற்றது. இருப்பினும் அவர்களுக்கு நுரைச்சோலையை அமைக்க வேண்டும் என்ற தேவை இருந்தது. திருகோணமலை அல்லது வேறு பகுதிகளில் அந்த உற்பத்தி நிலையத்தை அமைத்திருந்தால் பிரச்சினைகள் எழுந்திருக்காது. இவ்வாறான வேலைத்திட்டங்களுக்காக சில நிறுவனங்கள் 30 40 வருடங்கள் வரையில் கோருகின்றன. எமது நாட்டின் சட்டத்துக் கமைய 20 வருடங்கள் மாத்திரமே வழங்க முடியும். அதனால் அந்தச் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும் - என்றார். (ஓ-44)

## பெயர்மாற்றம்

கற்பகப்பிள்ளையார் கோயிலடி உடுவில் கிழக்கில் வசிக்கும் வல்லிபுரம் சிங்கராசா ஆகிய எனது பெயரை வல்லிபுரம் சின்னராசா என மாற்றம் செய்வதோடு இனி வரும் சகல ஆவணங்களிலும் **வல்லிபுரம் சின்னராசா** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

CS5159 (AK1)

**வல்லிபுரம் சின்னராசா**

## முழுநேர / பகுதிநேர வேலைவாய்ப்பு

**இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**அடிப்படைத் தகைமைகள்**

- ✓ G.C.E (O/L) பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தி
- ✓ 18 - 60 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக்கோவையை (Bio Data) கீழ்வரும் Whatsapp இலக்கத்துக்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

Whatsapp : 077 756 3781

jenyjude77@yahoo.com

## வீடு உடைத்து திருட்டு

வவுனியா, டிசெ.14

வவுனியா, மகாறம்பைக்குளம் கிராம வீட்டுத் திட்டத்தில் வீடொன்று உடைத்துப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

அரச உத்தியோகத்தர்களான கணவனும், மனைவியும் கடமைக்குச் சென்றிருந்தபோதே வீட்டுக் கதவு உடைக்கப்பட்டு வீட்டிலிருந்த பணம் திருடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-75)

# கலாசாரப் பெருவிழா வவுனியாவில் இன்று

வவுனியா, டிசெ. 14

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் வவுனியா பிரதேச கலாசாரப்பேரவையும் இணைந்து நடத்தும் பிரதேச கலாசாரவிழா வவுனியா மாவட்டச் செயலகக் கேட்போர் கூட மண்டபத்தில் இன்று வியாழக் கிழமை நடைபெறவுள்ளது.

இரு பிரிவாக இடம்பெறவுள்ள அரங்க நிகழ்வுகளில் காலை நிகழ்வு 9மணியிலிருந்து 12.30 மணிவரையும், மாலை நிகழ்வு மதியம் 1.30 மணிமுதல் 5.30 மணிவரையும் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் முதன்மை அதிதிகளாக தமிழ்மணி முனைவர் மேழிக்குமரன், கலாபூஷணம் கந்தையா ஐயம்பிள்ளை ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-110)

## மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 04 . 1954

மறைவு 11 . 12 . 2023



### கந்தையா சற்குணலிங்கம்

(முன்னாள் மானி. பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளரும், யாழ் மாவட்ட தாச்சிச் சங்கத்தின் பிரதான தீர்ப்பாளரும்)

மடத்தடி சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் அரசடி நவாலி தெற்கு மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சற்குணலிங்கம் (முன்னாள் மானி. பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளரும், யாழ் மாவட்ட தாச்சிச் சங்கத்தின் பிரதான தீர்ப்பாளரும்) அவர்கள் கடந்த (11.12.2023) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா (ஜோன்) மாணிக்கம் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான நன்னித்தம்பி செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், புஸ்பராணி (லலிதா) அவர்களின் அன்புக் கணவரும், ஜென்சி (சுவிஸ்), தனஞ்சயன், நிருஜா, தர்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், விமலேஸ் (சுவிஸ்), சமீரா, சுதர்சன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அஜீஸ், அஸ்மி (சுவிஸ்), வஸ்மிகா, சாய்பிரவீன், அஸ்வின், அக்ஷயன் ஆகியோரின் பாசமிகு பேரனும், சற்குணதேவி (கனடா), சந்திரகுமார், சற்குணரத்தினம், சந்திரசேகரம் (லண்டன்), சவுந்தராஜன் (ஜேர்மன்), சகுந்தலாதேவி, சரோஜாதேவி (கனடா), சஜிலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராசையா, அமிர்தலீலா, கமலாவதி, லோகேஸ்வரி (லண்டன்), தாரா (ஜேர்மனி), கமலதாஸ், காந்தராசா (லண்டன்), உதயகுமார், லீலாவதி, யோகேஸ்வரி, சந்திரசேகரம் (லண்டன்), ராகினி (கனடா), விஜயசேகரம் (லண்டன்), மாலா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.12.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு ஆரையம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: **குடும்பத்தினர்.**

**077 474 7319**

# சுற்றுலாவின் பெயரில் மதுபான நிலையங்கள்

## மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சுகிர்தன் சுட்டிக்காட்டு

வடக்கு - கிழக்கில் சுற்றுலா என்ற போர்வையில் மதுபான விற்பனை நிலையங்களை அரசாங்கம் ஊக்குவிப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது என வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் உடுப்பிட்டிப் பகுதியில் மக்களின் எதிர்ப்பை மீறி மீளவும் மதுபான சாலைக்கு அனுமதி வழங்கப்பட்டதற்கு எதிராக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே ச.சுகிர்தன் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உடுப்பிட்டியில் மக்கள் செறிந்துள்ள பகுதியில் சில மாதங்களுக்கு முன் மதுபான விற்பனை நிலையம் அமைக்கப்பட்டது. இதற்கு எதிராக மக்கள் பெருமளவில் போராட்டம் செய்தபோது பொதுமக்களின் எதிர்ப்பை கருத்திற்கொண்டு மதுபான விற்பனை நிலையத்தின் அனுமதி தற்காலிகமாக இரத்துச் செய்யப்பட்டு மூடப்பட்டது. ஆனால் தற்போது சில நாள்களாக மதுபான விற்பனை நிலையம் திறக்கப்பட்டு மீண்டும் வியாபாரம் மேற்கொள்ளப்படுகின்றது. உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, இமையாணன் இ.த.க. பாடசாலை, நவிண்டில் தாமோதரா பாடசாலை என்பன குறித்த மதுபானசாலைக்கு மிகக் குறைந்த தூரத்திலிருக்கின்றன. இவற்றைக் கருத்திற்கொண்டு இந்த மதுபானசாலை அப்புறப்படுத்தப்படவேண்டும் - என்றார். (ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவேறியது...

நேற்று மாலை வரவு - செலவுத் திட்டத் தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெ டுப்பு மேலதிக 41 வாக்குகளால் நிறை வேற்றப்பட்டது.

வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 122 வாக்குகளும், எதிராக 81 வாக்குக ளும் அளிக்கப்பட்டன. நாடாளுமன்ற உ றுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் வாக்கெ டுப்பில் இருந்து விலகி இருந்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க, அநு ரபிரியதர்ஷன யாப்பா உள்ளிட்டோரும் ஆதரவாக வாக்களித்தனர். வடிவேல் சுரேசும் ஆதரித்திருந்தார். அமைச்சுப் பதவி பறிக்கப்பட்ட ரொஷான் ரணசிங்க எதிர்த்து வாக்களித்தார்.

தமிழ்த் தேசியக் கட்சிகளும், எதிரணி பக்கம் உள்ள முஸ்லிம் கட்சிகளும் எதி ராக வாக்களித்தன. சிறிலங்கா பொது ஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் அரச பங்காளிக்கட்சிகள் ஆதர வாக வாக்களித்தன.

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்கவால் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நவம்பர் 13 ஆம் திகதி நாடாளு மன்றத்தில் முன்வைக்கப்பட்டது. நவம் பர் 14 ஆம் திகதி முதல் நவம்பர் 21 ஆம் திகதிவரை இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் இடம்பெற்றது.

2024 ஆம் நிதியாண்டுக்கான ஒதுக்கீட் டுச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு 45 மேலதிக வாக்குகளால் நிறைவேற் றப்பட்டது. இதற்கு ஆதரவாக 122 வாக் குகளும், எதிராக 77 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

நவம்பர் 22 ஆம் திகதி முதல் குழுநிலை விவாதம் நடைபெற்றது. நேற்று மாலை பாதீடு மீது இறுதி வாக்கெடுப்பு நடத்தப் பட்டு, திருத்தங்கள் சகிதம் நிறைவேற் றப்பட்டுள்ளது. (அ-எ-44)

## ஐ.எம்.எப்...

நாடாளுமன்றத்தில் விசேட அறிப் பொன்றை விடுத்தபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வீழ்ச்சியடைந்துள்ள இலங்கைப் பொரு ளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு அரசின் வேலைத்திட்டத்தைத் தவிர வேறு வழியில்லை. அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் உருவாக் கும் கற்பனைக் கதைகள் தொடர்பாக மக்கள் அவதானமாக இருக்கவேண் டும். கற்பனைக் கதைகள் மூலம் மீண் டும் நாடு வங்குரோத்து நிலைக்குத் தள் ளப்படும்.

சர்வதேச நாணயநிதியத்தின் இரண்டா வது தவணையின் அங்கீகாரத்துடன், இலங்கையின் நிதித்துறையை மேம்படு பலப்படுத்தும் வைப்புத்தொகை காப்புறு திக்காக உலக வங்கியில் இருந்து 150 மில்லியன் டொலர் கிடைக்கின்றது. அதன்மூலம் இந்த நாட்டின் வங்கி மற் றும் நிதித்துறை 100 வீதம் பாதுகாப்பாக இருக்கும்.

வற் உட்பட பல்வேறு வரிகள் விருப்பத்து டன் விதிக்கப்பட்டதல்ல. ஆனால், நாட் டின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு அந்தக் கடினமான தீர்மானங்களை எடுக்கவேண்டியுள்ளது.

நாம் இதுவரை வந்த பாதையை கைவிட இடமளிக்கவேண்டாம். சிலர் பேச்சுகளு டனும் விமர்சனங்களுடனும் நின்றுவிட்ட போதும், உள்நாட்டிலும், வெளிநாட்டி லும் ஆதரவைத் திரட்டி இந்த நாட்டை வெற்றிப்பாதைக்குக் கொண்டு வந்துள் ளோம்.

நாட்டு மக்கள் எனக்கு ஆதரவளித்தனர். நாட்டின் நலனுக்காகவும், இலங்கை யின் பாதுகாப்புக்காகவும் பல்வேறு இன் னல்களை எதிர்கொண்டு இந்தப் பய ணத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினர்.

நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து காப்பாற்றுவதற்காகத்தான் அந்தத் துன் பங்கள் அனைத்தையும் எதிர்கொள்ள நேரிட்டது - என்றார். (அ-எ-44-26)

## வடக்கில்...

ராஜா தெரிவித்தார். வடக்கு, கிழக்கு, வட மத்தி, ஊவா மற்றும் தென்மாகாணங்க ளுக்கு செம்மஞ்சள் எச்சரிக்கை விடுக் கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித் தார்.

தென்கிழக்கு வங்கக்கடலில் நிலவிவரும் குறைந்த காற்றமுத்தப் பகுதி இலங் கைக்குத் தெற்காக மாலைதீவு நோக்கி நகரவுள்ளது. இன்று காலை முதல், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவு னியா, கிளிநொச்சி, மன்னார் மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் மழை நிலைமை அதிகரித்துக் காணப்படும். எதிர்வரும் 18 ஆம் திகதிவரை இந்த மழை நிலைமை காணப்படும்.

காற்றின் வேகமும் அதிகமாகக் காணப் படும். பொதுமக்களும், கடற்றொழிலா ளர்களும் காற்று மற்றும் மின்னல் தாக்கம் தொடர்பில் அவதானத்துடன் செயற்படவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-எ-26)

## மயிலத்தமடு...

மயிலத்தமடு, மாதவனையில் கால்நடை களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் தொடர்பான ஒளிப்படங்களை ஜனாதிப திபிடம் சமர்ப்பித்துள்ளதுடன், மக்களின் தொடர் பிரச்சினைகள் தொடர்பாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்தப் பிரச்சி னைக்குத் தீர்வாக ஜனாதிபதி கூறிய எந்த விடயமும் நடைமுறைப்படுத்தப்ப டவில்லை என்றும் அவர்கள் ஜனாதிப திக்குத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் பயங்கரவாதத் தடைச் சட்டத் தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் கைதுகள் தொடர்பாகவும் இந்தச் சந்திப் பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கைது செய் யப்பட்டவர்களின் விவரங்களும் வழங் கப்பட்டு, அவர்களைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்திலிருந்து விடுவித்து, விடு தலைசெய்யவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-எ-26-213)

## ரவிராஜ்...

வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ. நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற் றிய சஜித் பிரேமதாஸ, எட்வேர்ட் ஹென்றி பெரிஸ் படுகொலை தொடர் பாக விசாரணை நடத்த குழுவொன்றை அமைச்சரவை நியமித்துள்ளது. இது நல்ல விடயம்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பா கவும் விசாரணை அவசியம். லசந்த விக்கிரமதுங்க, ரிச்சர்ட் டி சொய்சா, ஜோசப் பரராஜசிங்கம், ரவிராஜ், மகேஸ் வரன், சாகரிகா கோமஸ், பிரேமகீர்த்தி த அல்விஸ் ஆகியோரின் படுகொலைகள் தொடர்பாகவும், குழு அமைத்து விசா ரணை நடத்தி உண்மையைக் கண்டறி யுங்கள் என்று தெரிவித்தார். (அ-எ-44)

## நாடாளுமன்று...

வைக்கப்பட்டுள்ளது. அடுத்த நாடாளு மன்ற கூட்டத் தொடர் எதிர்வரும் ஜனவரி 9 ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பமாகும் என்று சபை முதல்வரும், அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்கவால் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நவம்பர் 13 ஆம் திகதி நாடாளு மன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

பாதீட்டு கூட்டத்தொடர் முடிவடைந்துள்ள நிலையில், இனி அடுத்த வரும் ஜனவரி 9 ஆம் திகதியே சபை கூடும் என அறி விக்கப்பட்டுள்ளது. எனினும், நாடாளு மன்ற கூட்டத்தொடரை இரு வாரங்க ளுக்கு ஜனாதிபதி இடைநிறுத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-எ-44)

## காணிப்...

தொடர்பாக இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

காணிகள் தொடர்பான முறைப்பாடுகள் மற்றும் தற்போதைய நிலைமை என்பது தொடர்பாக செயலகப் பிரதிநிதிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது. காணி விடயத் தில் பொதுமக்களின் சந்தேகங்கள், கேள் விகள் தொடர்பாக செயலகப் பிரதிநிதிகள் யாழ். மாவட்ட மேலதிக செயலருக்குச் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-எ-213-44)

## திடீர்...

கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன.

உடுவில் கற்பகப்பிள்ளையார் கோயில டியைச் சேர்ந்த ம.துசீந்தினி (வயது-26) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார். இவர் சுமார் ஒரு வருடத்துக்கு முன்னரே திருமணம் செய்திருந்தார். கணவர் புலம் பெயர் நாட்டில் வசிக்கின்றார். இவருக் குக் கடந்த 11ஆம் திகதி சுகவீனம் ஏற்பட் டுள்ளது. அதையடுத்து அவர் தெல்லிப் பழை மருத்துமனையில் சேர்க்கப்பட் டார்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கடந்த 12 ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப் பட்டிருந்த நிலையில், நேற்று சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளைத் திடீர் வலி.கிழக்கு இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். பெண்ணின் உடல் மாதிரிகள் ஆய்வுப் பரிசோதனைக்காகக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த 3ஆம் திகதி முதல் காய்ச்சல் ஏற் பட்டிருந்தது என்றும் மூளைக் காய்ச்சல் காரணமாக அவர் உயிரிழந்திருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது. மூன்று நாள்களுக்கு மேல் காய்ச்சல் காணப்பட் டால் மருத்துவ ஆலோசனை பெறப்படு வது அவசியம் என்று மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (அ-எ-27-26)

## மயங்கி...

நடந்துள்ளது. பொன்னாலை மேற்கு, சுழிபுரத்தைச் சேர்ந்த இரட்ணம் அருளா நந்தம் (வயது-69) என்பவரே உயிரிழந் தவராவார்.

நேற்று முற்பகல் அரைக்கும் ஆலைக் குச் சென்ற அவர், பொருளை அரைப்ப தற்குக் கொடுத்துவிட்டு அங்குள்ள இருக்கையில் காத்திருந்தபோது மயங் கிச் சரிந்துள்ளார்.

அவர் அங்கிருந்து சங்கானைப் பிரதேச மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப் பட்டபோதும், அவர் ஏற்கனவே உயிரி ழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் அறிக்கையிட்டுள்ளனர்.

இறப்பு விசாரணைகளை வலி.கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-எ-26)

## சைக்கிளில்...

நடந்துள்ளது. புன்னாலைக்கட்டுவன் வடக்கைச் சேர்ந்த செல்வம் சிவானந்தம் (வயது-81) என்பவரே உயிரிழந்தவரா வார்.

இவர் சைக்கிளில் பயணித்தபோது திடீ ரென மயங்கி வீழ்ந்துள்ளார். அங்கிருந் தவர்கள் அவரைத் தெல்லிப்பழை மருத் துவமனைக்குக் கொண்டு சென்றுள்ள னர். ஆயினும் அவர் ஏற்கனவே உயிரி ழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் அறிக்கையிட்டுள்ளனர்.


இறப்பு விசாரணைகளை வலி.கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-எ-26)

## மருகன்...

இந்தச் சம்பவம் தொடர்பான விசார ணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப் பட்டுள்ளன. (அ-எ-27-100)

## கத்தி வைத்து...

சமைத்து வைக்கப்பட்டிருந்த உணவையும் உட்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். வீட்டில் இருந்த இரு சைக்கிள்கள் மூலமே அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள் ளது. பொலிஸார் விசாரணைகளை முன்னெ டுத்துள்ளனர். (எ-113)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர்களுக்கு சுயநிர்ணயத் தீர்வு!



## அமெரிக்கக் காங்கிரஸ் உறுப்பினர் டொன்டேவிஸ் இவ்வாறு வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 14

**ஈழத் தமிழர்களுக்கு, சுயநிர்ணய அடிப்படையிலான தீர்வு அவசியம் என்று அமெரிக்கக் காங்கிரஸ் உறுப்பினர் டொன்டேவிஸ் வலியுறுத்தியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
அமெரிக்கக் காங்கிரஸில் உள்ளவர்கள், இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக ஒடுக்குமுறைகள் தொடர்கின்றன என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும். தமிழ்மக்களுக்கு சுயநிர்ணயத்தின் அடிப்படையில் தீர்வு வழங்கப்படவேண்டும். நான் தமிழர்களுக்குஆதரவாகஇருப்பேன். 1948இல் பிரிட்டிஸ் ஆட்சியாளர்கள் வெளியேறிய பிறகு சிங்களவர்கள் ஆதிக்கம் செலுத்தும் இலங்கையின் கீழ் இந்த சாம்ராஜ்ஜியங்கள் ஒன்றிணைக்கப்பட்டமை தமிழ் மக்கள் புறக்கணிக்கப்படுவதற்கு காரணமாக அமைந்தது. தமிழர்களுக்கு எதிரான அரசாங்கத்தின் அனுசரணையுடனான பாரபட்சமும் வன்முறையும் 30 வருட மோதல்களுக்கு வித்திட்டன. அதுவே 2009 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட தமிழ் இனப்படுகொலைக்குக் காரணமாகவும் அமைந்தது - என்றார். (ம)

# வவு. சாரண சங்க நிர்வாகம் தெரிவு!

வவுனியா, டிசெ. 14
வவுனியா மாவட்ட சாரணர் சங்கத்தின் நிர்வாகத் தெரிவும், மாவட்ட ஆணையாளர் தெரிவும் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வவுனியா மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.
இதன்போது, வவுனியா மாவட்ட ஆணையாளராக வவுனியா செட்டிக்குளம் பிரதேச செயலக உத்தியோகத்தர் கஜேந்திரன் தெரிவு செய்யப்பட்டார்.
சாரணர் சங்கத் தலைவராக வவுனியா வடக்கு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ம.ஜெயரூபன், செயலாளராக வவுனியா தெற்கு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வீரசிங்கம், பொருளாளராக வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அதிபர் ஆ.லோகேஸ்வரன், உபதலைவராக வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய அதிபர் தமிழழகன், உப செயலாளராக பூவரசன்குளம் மகா வித்தியாலய அதிபர் முரளிதரன், பதக்கச் செயலாளராக வவுனியா இராசேந்திரங்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் பரந்தாமன் ஆகியோருடன் நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ச-18)

# வர்த்தக வங்கிகளிடம் அறவிடும் 'லைசென்ஸ்' கட்டணம் உயர்வு!

கொழும்பு, டிசெ. 14
வர்த்தக வங்கிகளின் வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.
வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் வங்கிகளின் சொத்தை வைத்து மதிப்பிடப்படும். இதன்படி இரண்டு ட்ரில்லியன் சொத்துகளை வைத்திருக்கும் வங்கிகளிடமிருந்து 40 மில்லியன் அறவிடப்படவுள்ளது.
500 பில்லியன் தொடக்கம் ஒரு ட்ரில்லியன் வரையிலான சொத்துகளை வைத்திருக்கும் வங்கிகளிடமிருந்து 30 மில்லியன் அறவிடப்படவுள்ளது.
200 தொடக்கம் 500 பில்லியன் சொத்துகளை வைத்திருக்கும் வங்கிகளிடமிருந்து 26.5 மில்லியன் அறவிடப்படவுள்ளது. 125 தொடக்கம் 200 பில்லியன் சொத்துகளை வைத்திருக்கும் வங்கிகளிடமிருந்து 10.5 மில்லியன் அறவிடப்படவுள்ளது.
75 தொடக்கம் 125 பில்லியன் சொத்துகளை வைத்திருக்கும் வங்கிகளிடமிருந்து 13.5 மில்லியன் அறவிடப்படவுள்ளது. 25 தொடக்கம் 75 பில்லியன் சொத்துகளை வைத்திருக்கும் வங்கிகளிடமிருந்து 7 மில்லியன் அறவிடப்படவுள்ளது. 25 பில்லியன் சொத்துகளை வைத்திருக்கும் வங்கிகளிடமிருந்து 3.5 மில்லியன் அறவிடப்படவுள்ளது. (ச-6)


## வாடகைக்கு தேவை

காங்கேசன்துறை வீதியில் மனோகரா சந்திக்கும் தட்டாதெரு சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் அலுவலகம் ஒன்றினை அமைப்பதற்கு கடை அல்லது வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு :
077 468 2560, 077 956 8516


# கலைவிழாவும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், டிசெ. 14
கோண்டாவில் கிழக்கிலுள்ள குட்டிச்சுட்டி முன்பள்ளி மற்றும் அகம் குழந்தைகள் பகல்நேரக் காப்பக மாணவர்களின் ஆண்டிறுதிக் கலைவிழாவும் பரிசளிப்பு நிகழ்வும் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் கோண்டாவில் இராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளன.
நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட உடற்கூற்றியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் மருத்துவர் திருமதி சிவநந்தினி உதயகுமார் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ச-66)

# காணிப் பயன்பாடு விழிப்புக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ. 14
கல்லுண்டாய்க் கிராம மக்களுக்கு வினைத்திறனான காணிப் பயன்பாடு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.
கருத்தரங்கில் நவாலி தெற்குக் கிராமஅலுவலர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் காணிக் கிளை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-66)


## TECHNO WORLD
## A/L தொழில்நுட்பப்பிரிவு

A/L 2023 பரீட்சைக்கு தோற்ற இருக்கும் அனைத்து மாணவர்களுக்குரிய

## இலவசக் கருத்தரங்கு

16,17 December 2023
தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்

"நண்பகல் 12 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை"

இடம் : வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 077 017 5346


# நத்தார் அலங்காரம் யாழில் சூடுபிடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 14
யாழ்.குடாநாட்டு வர்த்தக நிலையங்களில் தற்போது நத்தார் அலங்காரப் பொருள்களின் விற்பனை சூடுபிடித்துள்ளது.
கிறிஸ்மஸ் பண்டிகை நெருங்குவதையடுத்து கிறிஸ்மஸ் மரம், பாலன்குடில்கள் போன்ற அலங்காரப் பொருள்கள் விற்பனை நிலையங்களில் அதிகளவில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
எனினும், கடந்த ஆண்டைப் போன்று அவற்றின் விலைகள் இம்முறையும் அதிகரித்தே காணப்படுகின்றன என நுகர்வோரால் தெரிவிக்கப்படுகிறது. (ச-17)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A-9 வீதி முகப்புடன் 24 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

* 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
* **நிலப்பரப்பு**, நன்னீரூற்று
* 20 அடிப்பாதையுடன்
* சித்த மருத்துவமனைக்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
* யாழ். பஸ்நிலையத்திலிருந்து 6 KM தூரம்
* நல்ல சூழல், குடியிருப்புகள் சூழவுள்ள காணி
* நன்னீர் ஊற்று நிலம்
* தரகர் தேவையில்லை.
* உரிய அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்து கொள்முதல் செய்து கொள்ள முடியும்.
* **பார்வையிடும் நேரம்:** காலை 6.00 - மாலை 6.00 மணிவரை.

தொடர்பு: 077 468 3354
076 755 8606

(CS 27307) A-1




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவ[illegible] 36 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org